Seminar on Scientific Temper at Pondicherry

# அறிவியல் மனப்பான்மை தின விழிப்புணர்வு கருத்தரங்கம்

புதுச்சேரி, செப்.16: புதுச்சேரியில் தேசிய அறிவியல் மனப்பான்மை தின விழிப்புணர்வு கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

அறிவியலுக்கான கூட்டமைப்பு சார்பில் ஆக.20-இல் தேசிய அறிவியல் மனப்பான்மை தினம் கொண்டாடப்பட்டது.

இதுகுறித்து, பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக சிறப்பு அறிவியல் கருத்தரங்கம் புதுவை தமிழ்ச் சங்க கருத்தரங்கக் கூடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கத்துக்கு அறிவியலுக்கான கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பிரசன்ன வெங்கடேஷ் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் புதுவை அறிவியல் இயக்க பொதுச்செயலாளர் அ. ஹேமாவதி வரவேற்றார்.

பகுத்தறிவாளர் கழகத் தலைவர் ரஞ்சித்குமார், இந்திய தேசிய மாதர் சங்க புதுச்சேரி தலைவர் சந்திரா, சமம் இயக்கப் பொதுச் செயலாளர் சிவகாமி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க பொருளாளர் கலியமூர்த்தி, எல்ஐசி ஊழியர்கள் சங்கத் தலைவர் ஆர்.எம்.ராம்ஜி, இந்திய மாணவர் சங்க மத்தியக் குழு உறுப்பினர் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கருத்தரங்கில் பேசுகிறார் புதுவை அறிவியல் இயக்கத் தலைவர் பேராசிரியை அமுதா.

புதுவை அறிவியல் இயக்கத் தலைவர் பேராசிரியை அமுதா, சம்மேளன கௌரவத் தலைவர் சி. எச். பாலமோகனன், திராவிடர் கழக மாநிலத் தலைவர் சிவ. வீரமணி ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

அகில இந்திய அறிவியல் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பொ.ராஜமாணிக்கம், எழுத்தாளர் ஆயிஷா இரா.நடராஜன், தமிழ்நாடு பகுத்தறிவாளர் கழக மாநில துணைத் தலைவர் கண்மணி ஆகியோர் அறிவியல், அறிவியல் வழிமுறை, அறிவியல் மனப்பாங்கு, அறிவியல் மனப்பான்மை, பகுத்தறிவு சிந்தனையின் தோற்றம், கேள்வியின் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் நடராஜன் நன்றி கூறினார்.

Pondicherry Science Forum submits memorandum to Chief Minister for passing Anti-Superstition Act in Pondicherry

